# கொக்குவில் இந்துக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம்
# (கனடா)

KOKUVIL HINDU COLLEGE
OLD STUDENTS ASSOCIATION (CANADA)

## 9 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்

## பேச்சுப் போட்டி

## நியூட்டனும் அப்பிள் பழமும்

இங்கிலாந்தில் நியூட்டன் என்ற சிறுவன் இருந்தான். அவனது சிறுவயதில் அப்பா இறந்துவிட்டார். அவனுடைய அம்மாவிடம் அதிகம் பணம் இல்லை. அவன் பாடசாலையில் திறமையாகப் படித்து வந்தான். விளையாட்டிற்காகக் காற்றாடியந்திரம், பட்டம் என்பவற்றைச் செய்தான். படங்கள் வரைவதிலும் கெட்டிக்காரன்.

பள்ளிப்படிப்பை முடித்து மேற்படிப்பைத் தொடர்ந்தார் நியூட்டன். மேற்படிப்பில் கணிதத்தை விரும்பிப் படித்தார். ஒருமுறை விடுமுறைக்கு வீட்டிற்கு வந்தார். வெயில் கடுமையாக இருந்தது. அதனால் தங்களது தோட்டத்துக்குப் போனார். அங்கே நின்ற ஓர் அப்பிள்மரத்தின் கீழ் களைப்பு ஆறினார். அப்பொழுது அப்பிள்பழம் ஒன்று அவரின் தலையின்மேல் விழுந்தது. அவர் யோசிக்கத் தொடங்கினார். இந்த அப்பிள்பழம் மேலே போயிருக்கலாமே, ஏன் இது கீழே விழுந்தது? என்று யோசித்தார். இதற்குக் காரணம் பூமியின் ஈர்ப்புவிசை என்பதைக் கண்டறிந்தார். இவரே புகழ்பெற்ற விஞ்ஞானி ஐசாக் நியூட்டன் ஆவார்.

நாம் எதையும் சிந்திக்க வேண்டும். அவற்றைப்பற்றி ஆராய வேண்டும். ஏன் என்ற கேள்வியினால் நல்ல பதில்களைப் பெறவேண்டும். இதன் மூலம் நாம் சிறந்த அறிவாளி ஆகலாம்.

*********

குறிப்பு: பின்வரும் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும் …….

**மனனம்** - 40 புள்ளிகள், **உச்சரிப்பு** – 20, நிற்கும் நிலை - 30 புள்ளிகள், **தொனி** - 20 புள்ளிகள்